Co-operative Lift Irrigation Societies.

* 43. Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) the number of Co-operative Lift Irrigation Societies which have been registered in North Arcot District;

(b) of these, the number of societies to which the Government have sanctioned loans; and

(c) the number of agriculturists who have registered themselves in these societies?

கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில், எத்தனை கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

(இ) இதில் எத்தனை சங்கங்களுக்கு அரசு கடன் வழங்கியுள்ளது?

(உ) அவைகளில் பதிவான விவசாயிகளின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) வட ஆற்காடு மாவட்டத்தில், 30—6—1973 முடிய 149 கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) இறைவைப் பாசனச் சங்கங்களுக்கு அரசு கடன் வழங்குவதில்லை. அவற்றை நிலவள வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். ஆயினும் கிடங்கு மற்றும் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு 3 சங்கங்களுக்கு அரசு கடனும் மான்யமும் வழங்கப்பட்டுள்ளது.

(உ) அவைகளில் பதிவான விவசாயிகளின் எண்ணிக்கை 3,157.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இதனால் எவ்வளவு ஏக்கர் விவசாயத்திற்கு பயனடையும்? எத்தனை சங்கங்கள் செயல்பட்டு, விவசாயச் சாகுபடி செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இதனால் 6,235 ஏக்கர் பயன் பெறும். இதுவரை கடன் பெற்ற 4 சங்கங்களில் 267 உறுப்பினர்கள் பயனடைவர்.